முருகப்பெருமான் துணை

**மகான் பூதத்தாழ்வார் அருளிய அறிவுரை ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

**20.11.2023**, திங்கட்கிழமை

1. மாதரும ஞான வள்ளலே
மக்களை தேற்றி அருளியே
பூதலம் காக்கும் தவசியாக
புண்ணிய வழி காட்டும் அரங்கனே
2. அரங்கனே உன்பெருமை கூறி
அகிலமதில் சோபகிருது தேள்திங்கள்
வரங்களென சதுர்திகதி சோமவாரம்
(சோபகிருது வருடம் கார்த்திகை மாதம் 04 ம் நாள், 20.11.2023, திங்கட்கிழமை)
வழங்குவேன் அறிவுரை ஆசி
3. ஆசிதனை பூதத்தாழ்வார் யானும்
அகிலம் நலம்பெற உரைப்பேன்
வாசிவென்ற ஞானிகள் படை
வல்லமை தந்து பிரணவக்குடிலில்
4. பிரணவக்குடிலில் அற்புதம் செய்ய
பேருலகோர் குடிலை நாடி
சரவணச்சுடரை தரிசித்து
சற்குருவேயென அரங்கன் திருவடி
5. திருவடி பற்றி தீட்சை அடைந்து
தெய்வ நூலாம் ஞானத்திருவடி
திருவடிபெற்று நாளும் வாசிக்க
தேசிகனார் பேரில் பூசை தொடர
6. தொடரவே கருமவினை விலகும்
தொடரவே துன்பங்கள் ஓடும்
இடைகண்டம் வஞ்சம் பிணி விலகி
எல்லாப் பாதுகாப்பும் வந்தடையும்

7. அடையவே அரங்க ஞானியே
அகிலமாற்றம் செய்திடவே
தடைவெல்லும் படைகளாக
தரணியோரை தயார் செய்திட
8. தயார் செய்திட அதனால் உலகோர்
தானாக அரங்கன் வழியில்
நேயமுடன் சரணாகதி கொண்டு
நேருமைபட இணைந்து வந்தாலே
9. வந்தாலே தானாக மாற்றம்
வரலாறு காணாத வண்ணம்
செந்தூரான் இறங்கி அருள
செயல்பாடு மிகுந்து உலகில்
10. உலகினில் ஞானப் படைகள்
உயர்வுபடத் தயாராகியே
உலகமாற்றம் காணக் கூடும்
உண்மை தரும பலம் கொண்ட
11. கொண்ட தலைமை உருவாகி
குருவருள் துணை நிற்கும்
தொண்டனுக்கே ஆளுமை பலம்
தேசிகன் ஆற்றலாக அரங்கேறும்
அறிவுரை ஆசி முற்றே

—சுபம்—